## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல்

**இரண்டாம் தவணை நிலையறி மதிப்பீடு – 2024**

**தரம் 6** **நேரம்: 1 மணித்தியாலம்**

### பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

1. கணினியின் அடிப்படை தொழிற்பாடுகளின் ஒழுங்குமறை எது?
   1. முறை வழிப்படுத்தல் → உள்ளீடு → வெளியீடு
   2. உள்ளீடு → வெளியீடு → வெளிப்படுத்தல்
   3. உள்ளீடு → முறை வழிப்படுதல் →வெளியீடு
   4. வெளியீடு → முறை வழிப்படுத்தல் → உள்ளீடு

2. பின்வருவனவற்றில் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப தரவுகளை முறைவழிப்படுத்தும் செயன்முறையின் ஈடுபடும் சாதனம் எது?
   1. சுாவிப்பலகை 2. மையமுறைவழி அலகு 3. தெரிவிப்பு 4. சுட்டி

3. பின்வருவனவற்றில் பேனா செலுத்தி, வழிப்படுத்தி என்பன முறையே
   1. தேக்க சாதனம், வெளியீட்டு சாதனம்
   2. உள்ளீட்டு சாதனம், வெளியீட்டு சாதனம்
   3. தேக்க சாதனம், தொடர்பாடல் சாதனம்
   4. தொடர்பாடல் சாதனம், வெளியீட்டு சாதனம்

4. தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவன், தனது வரலாற்றுப் பாடப் புத்தகத்தில் உள்ள படிமம்(Image) ஒன்றினை கணனியில் உள்ளீடு செய்ய விரும்புகின்றான். இதற்காக அவன் பயன்படுத்தும் உள்ளீட்டு சாதனம் யாது?
   1. வருடி 2. பட்டைக் குறிமுறை வரிப்பான் 3. சுட்டி 4. நுணுக்குப் பன்னி

5. கணினியில் தரவுகளையும் ,தகவல்களையும் தற்காலிகமாக சேமிக்க பயன்படுத்தும் சாதனம்,
   1. உள்வட்டு 2. முதன்மை நினைவகம்
   3. இறுவட்டு 4. பேனா செலுத்தி

6. கணினிக்கு வழங்கப்படும் தருக்க ரீதியான பாதுகாப்பு,
   1. CCTV பொருத்துதல் 2. பூட்டு போடுதல்
   3. நச்சுநிரல் வழங்குதல் 4. கடவுச்சொல் வழங்குதல்

7. A - கோப்புறைக்குள் கோப்புகளை வைக்கலாம்.
   B. கோப்புறைக்குள் இன்னொரு கோப்புறையை வைக்க முடியாது.
   C - கோப்புறைக்குள் ஒரே மென்பொருளின் இரு ஒத்த பெயருடைய இரு கோப்புகளை வைக்க முடியாது.
   D - கோப்புறை மஞ்சள் நிறத்தில் காணப்படும்.

   மேற்கூறப்பட்ட கூட்டில் சரியான விடை காட்டுவது,
   1. A, C, D 2. A, B, D 3. A, D 4. A, B, C, D

8. பின்வருவனவற்றில் நிரந்தர தேக்க சாதனமாக கருதப்பட முடியாதது,
   1. பேனா செலுத்தி 2. இறுவட்டு 3. தற்போக்கு பெறுவழி நினைவகம் 4. வன்வட்டு

9. இன் குறியீடு காட்டும் பணிசெயல் முறைமை யாது?
   1. Linux 2. Macos 3. Windows 4. Ubuntu

10. கணனி மென்பொருளுக்கு உதாரணமாக அமைவது,
   1. தரவு 2. வன்வட்டு 3. Raja.docx 4. சொல்முறை வழிப்படுத்தல்

(10 X 4=40)

## பகுதி II

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

I. பொருத்தமான விடையினை தெரிவு செய்து இடைவெளியை நிரப்புக.

**( பணிச்செயல் முறைமை, சுட்டியை, இணையத்தை, Kala.docx , தொடுதிரை )**

i. கணனித் திரையில் ………………………. பயன்படுத்தி பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

ii. ………………………… உள்ளீட்டு, வெளியீட்டு சாதனம் ஆக செயல்படுகின்றது.

iii. நாம் ஆசிரியரின் மேற்பார்வையின்றி ……………………… பயன்படுத்தக்கூடாது.

iv. ……………… என்பது சொல்முறை வழிப்படுத்தல் கோப்புக்கு உதாரணமாகும்.

v. பயனருக்கும் கணனிக்குமிடையே தொடர்புடைமையை ஏற்படுத்தும் பாலமாக ……………………………. விளங்குகின்றது. (5 X 3=15)

II. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

. A பகுதியை B பகுதியின் பொருத்தமான விடையுடன் இணைக்குக.

| | A | B |
|---|---|---|
| i. | தெரிவிப்பி | நிரந்தரமாக சேமித்தல் |
| ii. | வழிப்படுத்தி | தற்காலிகமாக சேமித்தல் |
| iii. | தற்போக்கு பெறுவழி நினைவகம் | பணத்தைப் பெறல், வைப்புச் செய்தல் |
| iv. | ATM பொறி | காட்சிப்படுத்தல் |
| v. | வன்வட்டு | தகவல்களைப் பரிமாறல் |

( 5x3=15)

1. **பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. கணினியின் சிறப்பியல்புகள் 4 தருக?

…………………………………………… ……………………………………………

…………………………………………… ……………………………………………

2. கணினி ஆய்வுகூடத்தில் எமது பாதுகாப்பிற்கான அற்ந்திருக்கவேண்டிய விடயங்கள் 2 தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

3. கணினி ஆய்வுகூடத்தில் நாம் செய்யக்கூடாத விடயங்கள் 2 தருக.

……………………………………………………………………………………………

…………………………………………………………………………………………..

4. கணினி உட்பொதிந்த சாதனங்கள் 4 தருக.

……………………………………… ……………………………………………..

……………………………………… ……………………………………………

5. வெளித்தேக்க சாதனங்கள் 2 தருக.

……………………………………… ………………………………………

(5x6=30புள்ளி)